# க.பொ.த சாதாரண தர மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

**அ. தயாளினி[1], ஆ. நித்திலவர்ணன்[2]**
thayalinis02@gmail.com[1], nithlavarnan@univ.jfn.ac.lk[2]

**ஆய்வுச் சுருக்கம்**
மாணவர்கள் தாம் கற்ற கல்விக்கேற்ப சிறந்த தொழிலைப் பெறுவதென்பது அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு மிக முக்கியமானதாகும். எனினும் தொழில் உலகில் ஏற்பட்டு வருகின்ற போட்டி வளர்ச்சிக்கேற்ப கற்றல் செயற்பாடுகளில் பெரும்பாலான மாணவர்கள் தமது தொழில் ஆர்வம் தொடர்பாக அக்கறையற்று இருப்பதனைக் காணலாம். தமது விருப்பங்களுக்கும் திறமைகளுக்கும் ஏற்றவாறான தொழில்களைத் தெரிவுசெய்யாது வாழ்க்கைக்காலம் முழுவதும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியநிலை உருவாகின்றது. இந்த ஆய்வுப்பிரதேசத்திலும் மாணவர்கள் தமது எதிர்காலத்தொழில் தொடர்பான முன்திட்டமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அந்தவகையில் இந்த ஆய்வானது மாணவர்களின் தொழில்சார்பான எதிர்பார்ப்புக்களை இனங்காண்பதுடன், அவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பம், மாணவர் மற்றும் பாடசாலை சார்பான காரணிகளைக் கண்டறியும் முகமாக மேற்கொள்ளப்பட்டது. கலப்பு விபரண ஆய்வு வடிவமைப்பைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் முறைகளை உள்ளடக்கிய ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை கல்விக் கோட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகள் எழுமாற்று மாதிரியெடுப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. 66 ஆசிரியர்கள் மற்றும் 118 மாணவர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலமும் ஐந்து பாடசாலை அதிபர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. தரவுகள் நூற்றுவீதப்பகுப்பாய்வு, மையநிலை அளவீடுகள் மற்றும் கருப் பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டன. இவ்வாய்வு முடிவுகளின் படி 94சதவீதமான மாணவர்கள் எதிர்காலவாழ்க்கைக்கு தொழிலை மேற்கொள்வதற்கு விருப்பமுடையவர்களாக காணப்படுகின்றனர். மாணவர்களின் தொழில் ஆர்வத்தினை தீர்மானிக்கின்ற குடும்பக்காரணிகளாக குடும்பத்தின் கல்விநிலை 70சதவீதமும், குடும்பத்தின் தொழில்நிலை 32சதவீதமும் செல்வாக்கு செலுத்துவதோடு குடும்ப ஒத்துழைப் பின்மை 64சதவீதமாக காணப்படுகின்றது. மாணவர்சார் காரணிகளில் தொழில் வழிகாட்டல் தேவை என்ற மனப்பாங்கு 69சதவீதமும், பாடசாலை சார்பான காரணிகளில் தொழில்சார் அமைப்புக்கள் செயலமர்வுகளை நடாத்தாமை 64சதவீதமும் காணப்படுகின்றது. குடும்ப ஒத்துழைப்பு போதாமை, தேசிய தொழில்சார் தகைமை பற்றிய விழிப்புணர்வின்மை, பாடத்தெரிவில் சுயவிருப்பம் அதிக செல்வாக்கு செலுத்துகின்றமை, அரசதுறை சார்ந்த தொழிலில் அதிக ஈடுபாடு, தொழில் வழிகாட்டல் செயற்பாட்டின் வினைத்திறனற்ற தன்மை போன்றன மாணவர்களின் தொழில் ஆர்வத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. இதனை நீக்கி தொழில் ஆர்வத்தை மேம்படுத்த பெற்றோருக்கு பிள்ளைகளது எதிர்கால தொழில் வாழ்க்கை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், தொழிற்பயிற்சிநெறிகள் தொடர்பாக விழிப்பூட்டல், பாடத்தெரிவின்போது தகுந்த வழிகாட்டல்களை வழங்குதல், தொழில் வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்துவதனை அதிகரித்தல் போன்ற தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** க.பொ.த சாதாரணதரம், எதிர்கால தொழில் ஆர்வம், செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

**அறிமுகம்**

இலங்கையின் தொழில்வாய்ப்புக் கொள் கையை நோக்குகின்ற போது மூன்றாம் நிலைக்கல்வியைப் பெற்றவர்களுக்கே முதன்மை கொடுப்பதாக அமைகிறதே ஒழிய பாடசாலைக் கல்வியுடன் வெளி யேறும் மாணவர்கள் தொடர்பாக முதன்மை கொடுக்காமை பாரிய குறைபாடாகும். இதன் காரணமாக பாடசாலைக் கல்வியுடன் வெளியேறுகின்ற 88 சதவீதமானவர்கள் தகுந்த தொழில் வாய்ப்பின்றியும் தொழில் வழிகாட்டலின்றியும் கஸ்ர நிலைமைகளை அனுபவித்து வருகின்றனர் (கனகேஸ்வரன், 2008).

பாடசாலை உலகிலிருந்து வெளியேறும் மாணவர்கள் ஏதோ ஒரு வேலையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசிய தேவையாகும். ஆயினும் அவர்களின் வயது காரணமாக உளரீதியாக எதிர்காலம் பற்றி சிந்திப்பதிலும் பார்க்க வேறு விடயங்கள் பற்றியே சிந்திக்கின்ற நிலைமை காணப் படுகின்றது. மாணவர்கள் தங்கள் எதிர் காலம் பற்றியே ஆழமாகவும் பொறுப் புடனும் சிந்திக்காமல் இருப்பதற்கு காரணம் அவர்களது அடிப்படைத் தேவைகள் பெற்றோர், பெரியோர்கள் அல்லது அரசாங்கம் போன்றவர்களால் நிறைவேற்றப்படுவதாகும். எனவே மாணவர்கள் தமது தொழில் ஆர்வம் தொடர்பாக மாணவப்பருவத்தில் உணர வேண்டியது அவசியமாகும்.

வேலை உலத்தினுள் சரியான வழிகாட்ட லின்றி செல்கின்ற போது சிக்கலானதும் யாவரும் அறிந்ததுமான வேலைகளின் பின்னே சென்று தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்படும். அதாவது, தொழிற் சந்தைக்குள் தேவையேற்படாத வேலைக்குச் செல்வதனால் வழிதவறிப் போவதற்கான வாய்ப்புக்கள் காணப்படும். அத்துடன் தமது விருப்பங்களுக்கும் திறமைகளுக்கும் ஏற்றவாறான வேலைகளுக்குச் செல்லாது விட்டால் மன உளைச்சலுடனும் அதிருப் தியுடனும் காலத்தை கடத்த வேண்டி ஏற்படும்.

எனவே வேலை உலகத்தில் காணப்படும் வேலைவாய்ப்புக்கிடையில் தமது ஆற்றல் களுக்கும் திறமைகளுக்கும் ஏற்றவாறான வேலையை தெரிவு செய்தல் வேண்டும். தொழில் உலகத்தை வெற்றி கொள்ளும் வகையில் மாணவர்கள் தமது தொழிற் பாடங்களை தெரிவு செய்து கற்றுகொள்ள வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஏனெனில் மாணவர்கள் தொழில் தெரிவு தொடர்பான விடயங்களை கருத்தில் கொள்வது இல்லை. அவர்கள் தமது இளமைக்காலப் பொழுதை பயனில்லாத முறையில் செலவு செய்யும் நிலையை காணமுடிகின்றது. இதனால் வாழ்க்கைக் காலத்தில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை உருவாகின்றது. தொழில்சார்ந்த ஆர்வம் தொடர்பான விடயங்களை கருத்திற் கொள்ளுகின்ற போது வேலை வாய்ப் பினைப் பெற்றுக்கொள்வதற்கான நிலை உயர்வடையும். இவ் ஆய்வானது பருத்தித் துறை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் எதிர் கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி ஆய்வு செய்கின்றது.

**ஆய்வுப்பின்னணி**

பருத்தித்துறைக் கல்விக்கோட்டப் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேச மானது கடல்வளமும் விவசாயமும் நிறைந்த பிரதேசமாக காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பெற்றோர்களது

பாரம்பரிய தொழில்களில் அதிகமாக ஈடுபடும் நிலை காணப்படுகின்றது. இப்பிரதேச பாடசாலைப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளது எதிர்கால தொழில் ரீதியான முன்திட்டம் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மாணவர்களாக இருக்கும் போதே வருமானம் ஈட்டு வதற்கான தொழில்கள் இப்பிரதே சத்தில் காணப்படுவதுடன் அதற்கு பெற்றோர்களும் ஆதரவளிக்கின்ற நிலை மையினைக் காணமுடிகின்றது. இப்பிரதேச மக்கள் தாங்கள் செய்யும் மீன்பிடி, விவசாயம், கூலி, கால்நடை வளர்ப்பு, வலையிழுத்தல் போன்ற தொழில்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லல் போன்ற காரணங்க ளினால் பிள்ளைகள் இத்தொழில்களில் ஈடுபட காரணமாக அமைகின்றது. இதனால் முறையான தொழில் வழிகாட்டல் இன்றித் தாம் கற்ற கல்விக்கு எதுவித தொடர்புமற்ற தொழில்களில் முடக்கப்பட்டு, தேர்ச்சியற்ற வருமானம் குறைந்த தொழில்களில் ஈடுபடுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

பருத்தித்துறை கல்விக்கோட்டப் பிரதேச பாடசாலைசார் கல்விச்சமூகம் பாடசாலைப் பருவத்திலே பிள்ளைகளுக்கான தொழிற் கல்வி திசைமுகப்படுத்தல்களை நடை முறைப்படுத்தும் நிலை குறைவாக காணப்படுகின்றது. தொழில்தெரிவு தொடர்பாக தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் தெரியாமலே பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்நிலை காணப்ப டுகின்றது. பொதுவாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையேயும் மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பான உயர்வான எண்ணங் கள் காணப்படவில்லை. ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இன்று உலக தொழில் சந்தையில் தொழில் தெரிவு தொடர்பான விடயங்கள் முழுமையாகத் தெரியாத நிலை காணப்படுகின்றது. தொழில் தெரிவு தொடர்பாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆலோசனைகளை முன்வைப்பதுமில்லை. அத்துடன் நாட்டின் தொழில் துறைக்கு ஏற்றவகையான மாணவர்களை உருவாக்க முடியாத தன்மையை நோக்க முடிகின்றது.

இதனால் இவ்வாய்வானது மாணவர்களது எதிர்காலத் தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் பற்றி ஆய்வு செய்கின்றது. அந்தவகையில் மாணவர்சார் காரணிகள், குடும்பம்சார் காரணிகள் மற்றும் பாடசாலைசார் காரணிகளும் மாணவர்களது எதிர்காலத் தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பான தீர்மானத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளை மாணவர்களது எதிர்கால நன்மை கருதியும், பயனுறுதி வாய்ந்ததாகவும் மாற்றும் போது தொழில் ஆர்வம் தொடர்பான தீர்மானம் பொருத்த மானதாக அமையும்.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வி ஒரு வாழ்க்கையுடன் இணைந்து ஒரு மேம்பட்ட நிலையை ஏற்படுத்தும் போதே அதன் பெறுமதி உணரப்படுகின்றது. ஒருவர் தான் கற்ற கல்வி மூலம் எதிர் காலத்தில் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கான சிறந்த தொழிலைப் பெறுவதற்கான தீர்மானத்தை எடுப்பது அவசியமாகவுள்ளது. பருத்தித்துறை கல்விக்கோட்டப் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த சாதாரணதர வகுப்பு மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதாக இவ் ஆய்வு அமைகின்றது.

மாணவர்கள் தாம் பெற்ற கல்வி மூலம் எதிர்காலத்தில் தமது திறமைக்கும் தகுதிக்கும் பொருத்தமான தொழில்களைத் தெரிவு செய்வதில் சரியான வழிகாட்டலும் விழிப்புணர்வும் குறைவாகக் காணப்படு கின்றது. வேலையில்லாப் பிரச்சினை என்பது உலகளாவிய பாரிய நெருக்கடி ஆகும். இலங்கையில் வேலையற்றோர் சதவீதம் அதிகரித்துக் கொண்டு செல்லு கின்றபோதும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் வேலையற்றோர் வீதமானது தேசிய சராசரியை விட உயர்வானதாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை -1 காட்டி நிற்கின்றது.

அட்டவணை - 1: இலங்கை மற்றும் யாழ்ப் பாண மாவட்டவேலையின்மை வீதம்

| ஆண்டு | இலங்கையின் வேலையின்மை வீதம் | யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலையின்மை வீதம் |
|---|---|---|
| 2017 | 4.2% | 10.7% |
| 2018 | 4.4% | 6.7% |
| 2019 | 4.8% | 6.0% |
| 2020 | 5.5% | 6.8% |
| 2021 | 5.1% | 7.5% |

(மூலம் - தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2021)

அட்டவணை-1 இன் படி இலங்கையின் வேலையின்மை வீதமானது காலத்திற்கு காலம் அதிகரித்து காணப்படும் நிலையை அறிய முடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலையின்மை வீதமும் அண்மைக்காலத்தில் அதிகரித்துச் செல்லும் நிலைமையையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நாட்டின் தொழில்துறைக்கு ஏற்ற வகையான மாணவர்களை உருவாக்க முடியாத தன்மையை நோக்க முடிகின்றது. இதனால் கல்வி கற்றவர்களின் மத்தியில் வேலையின்மை வீதமானது கூடுதலாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை காட்டி நிற்கின்றது.

அட்டவணை - 2: வேலையற்றோர் வீதம் கல்வி மட்ட அடிப்படையில்

| **கல்வி மட்டம்** | **மொத்தம்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|---|
| 6 ஆம் வகுப்பிற்கு கீழ் | 2.2% | 2.3% | 2.2% |
| 6-10 ஆம் வகுப்பு | 32.6% | 41.5% | 24.2% |
| க.பொ.த சா/த) | 23.5% | 27.7% | 19.7% |
| க.பொ.த (உ/த), அதற்கு மேல் | 41.7% | 28.5% | 53.9% |

(மூலம் - தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் - 2021)

இவ் அட்டவணை-2 இன் படி கல்விமட்ட அடிப்படையில் மிக உயர்ந்த நிலையில் வேலையின்மை வீதம் காணப்படுகின்றது. தொழிற்துறைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதிகளற்ற உயர்கல்வி கற்றோர் தொகையினரே பெரும்பாலும் வேலையற்றோராக உள்ள னர். முறையான தொழில் வழிகாட்டல் இன்றித் தாம் கற்ற கல்விக்கு எதுவித தொடர்புமற்ற தொழில்களில் முடக்கப் படுகின்ற நிலைமையே காணப்படுகின்றது. அத்துடன் தேர்ச்சி குறைந்த தொழில்களில் இணைந்து தொழில் பெறுமானமற்ற வர்களாக காணப்படுகின்றனர். இதனால் மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்நிலைமைக்கு மாணவர் களை இட்டுச்செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாய்வானது க.பொ.த சாதாரணதர மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும்

மாணவர், குடும்பம் மற்றும் பாடசாலைசார் காரணிகளினை அறிந்து மேம்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது.

### ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும்

### ஆய்வின் நோக்கம்

க.பொ.த (சா/த) மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்தல்.

### ஆய்வின் குறிக்கோள்கள்

1. மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பான எதிர்பார்ப்புக்களை இனங் காணுதல்.
2. தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பம் சார்பான காரணி களைக் கண்டறிதல்.
3. தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர் சார்பான காரணி களைக் கண்டறிதல்.
4. தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் பாடசாலை சார்பான காரணி களைக் கண்டறிதல்.

### ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது விவரண அளவைநிலை ஆய்வு வடிவமைப்பு ஆகும். ஆய்வாளர்களே நேரடியாகச் சென்று முதல்நிலை தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஆய்வுக்கு வேண்டிய விபரங்களை சேகரிப்பதால் இவ்வாய்வு வடிவமைப் பானது பயன்படுத்தப்படுகின்றது. அளவறி மற்றும் பண்பறி கலந்த கலப்புநிலை ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்படும் தரவுகள் புள்ளி விபர ரீதியாகவும் நேர்காணல் மூலம் பெறப்படும் தகவல்கள் பண்புரீதியாகவும் வியாக்கியானம் செய்யப்படுவதால் இவ் ஆய்வானது கலப்பு நிலை ஆய்வுமுறையை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்துடன் இவ் ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தில், வடமராட்சி கல்வி வலயத்தின், பருத்தித்துறை கல்விக்கோட்டப் பாடசாலைகளை பிரதி நிதித்துவம் செய்வதாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலுள்ள 33 பாடசாலைகளில் அவற்றின் வகைக்கு அமைவாக வரிசைப்படுத்தப்பட்டு எளிய எழுமாற்று அடிப்படையில் யா/சிதம்பரக் கல்லூரி, யா/தும்பளை சிவப்பிரகாச வித்தி யாசாலை, யா/தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம், யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை, யா/பொலி கண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகிய 5 பாடசாலைகள் ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிறெஜ்சி மற்றும் மோர்கன் (1970) எழுமாற்று மாதிரியின்படி 81 பேர் ஆசிரியர் குடித்தொகையில் 66 பேர் ஆய்வு மாதிரிகளாகவும், 166 பேர் மாணவர் குடித் தொகையில் 118 பேர் ஆய்வு மாதிரிக ளாகவும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட் படுத்தப்பட்டனர். அத்துடன் ஐந்து பாடசாலை அதிபர்களும் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ் ஆய்வின் போது முதல்நிலைத் தரவு சேகரிக்கும் கருவி களாக வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் என்பன பயன்படுத்தப் பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள் தொடர்பான பதிவேடுகள், அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டன.

அளவுநிலைத் தரவுகள் SPSS மென்பொதி யைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப் பட்டது. விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்காக நூற்றுவீதம் மற்றும் மையநிலை அளவீடுகள் பயன்படுத் தப்பட்டன. பண்புநிலைத்தரவுகளின் பகுப் பாய்விற்காக கருப்பொருள் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது.

### ஆய்வு முடிவுகள்

### மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

உளவியற்சோதனைகளும் செயற்பாடுகளும் (2019) எனும் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான கைந்நூலில் மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறையை தெரிவு செய்வதற்கும் எதிர்காலத்தில் திருப்திகரமான தொழிலுக்குள் பிரவேசிப்பதற்கும் தமது திறன், ஆர்வம், விருப்பம் என்பவற்றை அடையாளம் காண்பது முக்கியமாகும். அதாவது, தொழிலுலகை நோக்கிப் பயணிக்க விரும்புவோர் தன்னிடம் உள்ள அறிவாற்றல் திறனையும் விருப்புக்களையும் ஆராய வேண்டும். அதனை ஆதாரமாகக் கொண்டு தம்மைத்தாமே ஆய்வு செய்து பின்னர் அதற்கேற்ற வழிமுறைகளில் தொழிலுக்கான தேடலை மேற்கொள்ள முடியும். பொருத்தமான தொழிற்துறையினை விருப்பப்படி தெரிவு செய்யும் போது மிகச் சரியான வழியினைக் காட்டுவதோடு உச்ச தொழில் திருப்தியையும் வெற்றியையும் தருவதாக அமையும்.

மாணவர்களின் எதிர்கால தொழில் ஆர்வத்தில் மாணவர் சார்பான காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலைக் காரணிகள், சமூகக் காரணிகள், சுற்றுச் சூழல் காரணிகள், காணப்படும் வாய்ப்புக்கள் போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மாணவர்களின் தொழில் ஆர்வத்தினை தீர்மானிப்பதில் குடும்பத்தின் தன்மை, குடும்ப பாரம்பரியம், குடும்ப பொருளாதாரம் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் எவ்வாறான தொழில்களைச் செய்ய வேண்டும் என்பது பிள்ளைகளை பெற்று வளர்த்த ஒவ்வொரு பெற்றோரினதும் கனவாகும். பிள்ளைகளது எதிர்காலத் தொழில் நிலையில் குடும்பங்களது பங்களிப்பு அவனது வளமான எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றது. வசதி குறைந்த குடும்பங்களது திட்டமிடல்கள் தங்களது வாழ்க்கை நிலைக்கேற்ப காணப்படுவதாகவும், வசதி படைத்த குடும்பங்கள் பிள்ளைகளது எதிர்கால தொழில் தொடர்பாக உயர்வாகச் சிந்திக்கும் நிலையும் காணப்படுகின்றது. அவ்வாறே தந்தையை தலைமையாகக் கொண்டு செயற்படும் போது பிள்ளைகள் குடும்ப சுமையை சுமக்காமல் சிறுவர் பராயத்தில் கல்வியைப் பெறுவதாகவும் தந்தை குடும்ப தலைமையைப் பொறுப்பெடுக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் குடும்ப சுமைகள் காரணமாக தொழில்களுக்கு செல்ல வேண்டியவர்களாக உள்ளனர். இவை அவர்களது எதிர்காலத் தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மேலும் மாணவர்களின் தொழில் ஆர்வத்தினைத் தீர்மானிப்பதில் மாணவர்களின் ஆற்றல், ஆளுமை, வயது, பாலினம், விருப்பு, மனப்பாங்கு, சகபாடிக்குழுக்கள், மாணவர்களின் பாடத்தெரிவு போன்ற மாணவர் சார்பான காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். இவற்றில் மாணவர்களின் விருப்பு கூடிய செல்வாக்குச் செலுத்துகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மாணவர்களின் தொழில் ஆர்வத்தில் ஆசிரியர்களின் வகிபாகம், அதிபரின் வகிபாகம், கலைத்திட்டம், தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் போன்ற பாடசாலை சார்பான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலைகளில் தொழிற்கல்வி தெரிவு நோக்கிய வழிப்படுத்தல் செயற்பாடுகளில் பாடசாலையின்

தலைவர் என்ற வகையில் அதிபரின் பங்களிப்பு அவசியமானதாகும். அவ்வாறே மாணவர்களின் எதிர்காலத் தொழில் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்கண்டு, தகுந்த வழி காட்டல்களை மேற்கொள்வதில் ஆசிரியர் களுக்கு நெருக்கமான தொடர்பு காணப்படு கின்றது. கலைத்திட்டத்தில் தொழிற்கல்வி, தொழில்வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் உட்புகுத்தப்பட்டு, பாடசாலைகள் கடமைக்கு என செயற்படாமல் மாணவர் நன்மை கருதி அவர்களது எதிர்கால வாழ்க்கையை மையமாகக் கொண்டு கலைத்திட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அது பாடசாலைக் காலத்தி லேயே மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பான சிந்தனையை ஏற்படுத்துவதாக அமையும். அத்துடன் பாடசாலைகளில் தொழிற்கல்வி தொடர்பான செயலமர்வு களை ஒழுங்குபடுத்தி நடத்துவதும் அவசியமானதாகும்.

**மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பில் எதிர்கொள்ளும் சவால்கள்**

- இம்மாணவர்கள் பாடசாலை வகுப் பறைக் கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளில் மாணவர்கள் எதிர்காலத் தொழில் திட்டங்கள் பற்றிய எதிர் பார்ப்புடன் ஓரளவு ஈடுபடுகின்றதனைக் காணமுடிகின்றது.
- பெற்றோர்களது கல்வித்தரமானது 50% க.பொ.த சாதாரணதரம் வரை காணப்படுகின்றது.
- பெற்றோர் மேற்கொள்ளும் தொழிலில் 38% மாணவர்கள் பாரம்பரியத்தொழில் செய்யும் நிலை காணப்படுவதுடன் தொழிற்பயிற்சியற்ற. வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் வருமான அளவு குறைவாகக் காணப்படுகின்றது. குறைவருமானம் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் பெற்றோர்கள் 70 சதவீதமானதாகக் காணப்படுகின்றது.
- மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற குடும் பத்திலுள்ளவர்களின் ஒத்துழைப்பு 64 சதவீதம் குறைவாகக் காணப்படுகின்றது.
- பிள்ளைகளது எதிர்கால தொழில் வாய்ப்பு தொடர்பான கலந்துரையாடல் கள் திருப்தியற்றநிலை காணப்படு கின்றது.
- பெற்றோர் தங்களுடைய பிள்ளைகள் அரசாங்கத் துறைகளில் பணிபுரிய வேண்டும் என்பதனை விரும்புகின்றனர்.
- பாடத்தெரிவில் 86% மாணவர் களின் சுயவிருப்பம் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. சுயவிருப்புத் தெரிவில் பாடத்திலுள்ள விருப்பம், பரீட்சை சித்தி என்பவற்றை கருத்தில் கொண்டே பாடங்களைத் தெரிவு செய்கின்ற நிலை காணப்படுகின்றது.
- பிரதேசத்தில் வேலைவாய்ப்பு பெறக் கூடிய பல்வேறு துறைகள் தொடர்பாக 64% மாணவர்கள் அறிந்திருக்கும் நிலை காணப்படுகின்றது.
- தொழில்வழிகாட்டல் தேவை என்ற மனப்பாங்கு 69% மாணவர்களின் மத்தியில் உயர்வாக காணப்படுகின்றது.
- மாணவர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமை பற்றிய அறிவு 47% மாணவர்களுக்கு ஓரளவு இருப்பதனைக் காணமுடிகின்றது.
- தொழிற்பயிற்சிநெறியை கற்றுக்கொள் வதில் மாணவர் காட்டும் விருப்பம் 59% மாணவர்களுக்கு ஓரளவு காணப்படு கின்றது.
- தொழில் ஆர்வம் தொடர்பாக சக மாணவர்களுடன் சேர்ந்து கதைப்பதற்கு

காணப்படும் வாய்ப்பு 42% குறைவாகக் காணப்படுகின்றது.

- காலைக்கூட்டத்தின் போது பாடசாலையில் தொழில் தெரிவு தொடர்பான விடயங்கள் 46% வீதம் அதிபரால் ஓரளவு கூறப்படுகின்றது.
- பாடத்தெரிவு தொடர்பான வழிகாட்டல் ஆலோசனை 58% வீதம் வழங்கப்படுகின்றது.
- மாணவர்களின் தொழில் தெரிவு தொடர்பாக ஆசிரியர்கள் கருத்துக்கூறும் நிலை 47% வீதமாகக் காணப்படுகின்றது.
- மாணவர்களது தகைமைகளையும் திறமைகளையும் கவனத்தில் கொண்டு தொழிலுக்கு ஊக்குவிக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் 70% இடம்பெறுகின்றது.
- தொழில்சார் அமைப்புகள் பாடசாலைக்கு வருகை தந்து செயலமர்வுகளை நடாத்துவது 64% வீதம் குறைவாகக் காணப்படுகின்றது.
- பாடசாலையில் நவீன வேலைவாய்ப்பு, தொழில் நிபுணர்கள், தொழில் நிறுவனங்கள் தொடர்பான ஆவணங்கள், படங்கள் காட்சிப்படுத்தல்கள் 75% வீதம் குறைவாகக் காணப்படுகின்றது.

**மாணவர்களின் தொழில் ஆர்வம் தொடர்பான மேம்பாட்டுக்கான சிபார்சுகள்**

மாணவர்களிடத்தே தொழில் ஆர்வம் தொடர்பான எதிர்பார்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளும் வகையில் அம்மாணவர்கள் கற்றலில் சிறப்பாக ஈடுபடுவதற்கான வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தல், மாணவர்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணுதல், பாடசாலை வளங்களை உச்சளவில் பயன்படுத்துதல், தொழில் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குதல், பெற்றோர்களுடனான சந்திப்புக்களை மேற்கொண்டு அவர்களுடன் கலந்துரையாடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தொழில் ஆர்வம் தொடர்பான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

அதிகமான பெற்றோர்களுக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. குறைந்த கல்வித் தரமுடையோர் தங்களுடைய வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். பாரம்பரிய தொழில்கள் குறைந்த வருமானம் கொண்டவை என்பதனை பெற்றோர் பெறும் வருமான அளவுகளைக் கொண்டு சுட்டிக்காட்ட வேண்டும். பாரம்பரிய தொழில் செய்பவர்களிடம் தற்போதைய தொழிலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல் வேண்டும். அத்துடன் தொழிற்பயிற்சியற்ற வேலைகளில் ஈடுபடுகின்றமையே வருமானக்குறைவுக்கு காரணம் என்பதையும் எடுத்துக் கூறுதல் வேண்டும். வெளிநாடு செல்பவர்கள் தேசிய தொழில் தராதர சான்றிதழை பெற்றுச் செல்கின்ற போது அதிக வருமானமுடைய தொழில்களைச் செய்யலாம் என்பதை எடுத்துக் கூறுதல் வேண்டும். தொழில் வாய்ப்புத் தொடர்பாக பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஏற்படும் நன்மையான விளைவுகள் எடுத்துக்கூறப்பட வேண்டும். தேசிய தொழில்சார் தகைமைகள் முன்னுரிமை பெறுவதால் எதிர்காலத்தில் பாடசாலையில் பெறும் கல்வியை மாத்திரம் கொண்டு வேலை வாய்ப்பைப் பெறமுடியாது என்பதை எடுத்துக்கூறுதல் வேண்டும். எதிர்காலத்தில் அரசதுறையில் வேலைவாய்ப்புகள் வழங்கமுடியாத நிலை காணப்படுவதனால் தொழிற்பயிற்சி நெறிகளில் பிள்ளைகளை

இணைக்க வேண்டிய தேவையினை சுட்டிக் காட்ட வேண்டும்.

எதிர்காலத்தில் பாடசாலையில் கற்கும் நூற் கல்வி மட்டும் தொழில் பெறும் தகைமையாக கருதப்படமாட்டாது என்பதனை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும். அரச துறைகளில் எதிர் காலத்தில் வேலைவாய்ப்புக்கள் வழங்குவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். பாடத்தெரிவில் மாணவர் சுய விருப்பம் அதிக செல்வாக்குச் செலுத்துவதனால் சுயவிருப்பை சரியான தீர்மானமாக எடுப்பதற்கான வழிகாட்டல் வழங்கப் பட வேண்டும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைவது மட்டும் மாணவர்களது இலக்கல்ல என்பதனையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும். தொழிற்கல்வி பெறும் மாணவர்களுக்கு தகுந்த வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். பிரதேசத்தில் காணப்படும் தொழில்களை செய்ய விரும்பும் மாணவர்களுக்கான பாடநெறிகளையும் பயிற்சிகளையும் நோக்கி வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். தேசிய தொழில்சார் தகைமையைப் பெறுவதன் மூலமே வருமானம் கூடிய தொழில்களைச் செய்யலாம் என்பதனை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

மாணவர்களின் தொழில் தெரிவு தொடர்பான விடயங்கள் காலைக்கூட்டத்தின் போது முக்கியப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால தொழில் ஆர்வத்துக்கு அடிப்படையாக விளங்கும் தொழில்நுட்ப பாடத்தெரிவின் போது தகுந்த வழிகாட்டல் ஆலோசனை வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுடன் தொழில் தெரிவு தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாட வேண்டும். தொழில் வழிகாட்டல் செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டும். தொழில்சார் அமைப்புகள் பாடசாலைக்கு வருகை தந்து செயலமர்வுகளை நடாத்துவது அதிகரிக்கப்பட வேண்டும். பாடசாலையில் தொழில் தகவல் பலகை காட்சிப்படுத்தல் வேண்டும். வழி காட்டலுக்கான ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அனைவருக்கும் துறைசார்ந்த பயிற்சிகளை வழங்குதல் வேண்டும். தொழிற்கல்வி தொடர்பான செயலமர்வுகளில் பங்குபற்றும் மாணவர் களது பங்குபற்றலை மேலும் அதிகரிக்க வேண்டும்.

### எதிர்கால தொழில் ஆர்வத்தை மேம்படுத்துவதற்கான சில முன்மொழிவுகள்

1. ஒரு மாணவனுடைய ஆளுமை, திறமை இனங்காணப்படும் அடித்தளம் ஆரம்பப் பிரிவில் இருந்தே உருவாகின்றது. தொழில் ஆர்வம் தொடர்பான ஆய்வுச் செயற்பாட்டில் ஆரம்பப்பிரிவு மாணவர் வழிப்படுத்தல் சார்பான விடயங்கள் வருவது சிறப்பாக அமையும்.

2. க.பொ.த உயர்தர மாணவர்களினை எதிர்கால தொழிலுக்கு வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்களின் வகிபங்கு தொடர்பான கருத்துக்களை முன் வைப்பது சிறந்தது.

3. பாடசாலைகளில் இருந்து இடைவிலகி நிரந்தர தொழிலின்றி இருக்கும் மாணவர்கள் பிரச்சினைகளை ஆய்வில் இணைத்துக்கொள்வது சிறந்தது.

### முடிவுரை

எதிர்கால வாழ்க்கைக்கு மிக முக்கியமாக அமையும் விடயங்களில் தொழிலும் ஒன்றாகும். அத்தகைய தொழில் மன நிறைவாக அமைவதும், தொடர்ந்து தடையின்றி நடைபெறுவதும் மனிதனுக்கு கிடைக்கும் வெற்றியாகும். நல்ல தொழில்

தெரிவானது சிறந்த கல்வி மூலம் கிடைக்கின்றது. மாணவர்கள் கல்வி கற்கும் பருவத்தில் அவர்களது ஆளுமைத் திறன்களை வெளிக்கொணரச் செய்து அதற்கேற்ப பாடத்துறைகளைத் தெரிவு செய்து கற்பது மாணவர்களது எதிர்கால தொழில் ஆர்வத்துக்கு அடிப்படையாக அமைகின்றது. ஒவ்வொரு மாணவரது எதிர்கால வாழ்வுக்கு தேவையான தொழிலை அது சார்பான கற்கை நெறிகளை, பயிற்சிகளை மாணவருக்கு தெரியப்படுத்தி பொருத்தமான தொழிலை தெரிவு செய்வதற்கு ஆர்வமூட்டும் வகிபாகம் பாடசாலைக்கே உண்டு. தொழில் வழிகாட்டலுக்கு தேவையான உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தி வழிகாட்ட வேண்டிய முக்கிய பொறுப்பு பாடசாலையையே சாரும். எனவே மாணவர்களது எதிர்கால தொழில் ஆர்வத்தில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரது ஒத்துழைப்பு என்பன கிடைக்குமிடத்து அவர்களது தொழில் தெரிவானது சிறப்பாக அமைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


கனகேஸ்வரன், க. (2008). *இளவயதினருக்கு பொருத்தமான தொழில் வாய்ப்புக்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளும்*. யாழ்ப்பாணம்: கமலாலயம்.

*தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்* (2021), http://www. statistics. gov.lk/ .

நித்திலவர்ணன், ஆ. (2015). *பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி*. கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

ஜெயராசா, ச. (2012). *கல்வியில் தொடர் தொழில் வழிகாட்டல்*. கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

Afrose, F., Badhusha, HF., Paslan, HM., Israth,U., Mazahir, SMM. (2022). தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் மாணவர்களிடத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தின் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு', *Proceeding of 10th International Symposium, South Eastern University of Sri Lanka.*

Alamzeb., Arshad Ali., Atta Ullah. (2021). 'The Role of Teachers in Career Guidance of Students at Secondary Level in Pakistan', *Journal of Social Sciences Review*, 1(2): 26-37.

Kim, S., Ahn, T., Fouad, N. (2016). Family Influence on Korean Students' Career Decisions: A Social Cognitive Perspective. *Journal of Career Assessment,* 24(3): 513 – 526.

Olamide, S.O., Olawaiye, S.O. (2013) The factors determining the choice of career among secondary school students. *The International Journal of Engineering and Science,* 2(6): 33-44.

Pascual, N.T. (2014). Factors affecting high school students' career preference: A basis for career planning program. *International Journal of Sciences: Basic and Applied Research*, 16(1):1-14.

Swaris, W. D. K. J. N.(2021). Determinants of Career Choice among G.C.E. Ordinary Level students in Sri Lanka with special reference to the Kalutara District, Western Province. *Sri Lanka Journal of Social Sciences and Humanities,* 2(1): 1–9.

Vaghela, T.R, Matimbwa, H. (2019). Determinants of career choice among secondary schools students: evidence from selected secondary schools in Tanzania. *Journal of Business Management and Economic Research*, 3(2): 42-55.

Vanessa Dodd., Jill Hanson., Tristram Hooley (2022). Increasing students' career readiness through career guidance: measuring the impact with a validated measure, *British Journal of Guidance & Counselling,* 50(2): 260-272.